# பாரதியார் பல்கலைக்கழகம்

## கோயம்புத்தூர் - 641 046

**இளங்கலை - அறிவியல் பட்டப்படிப்பில் முதலாண்டு, தமிழ் பயில்வோர்க்குரியது**

*(அனைத்து இளநிலைப் (UG) பட்டவகுப்பு மாணவர்க்குரியது)*

(B.A., B.Sc., B.Com., B.B.M., B.C.S., etc.)

# செய்யுள் திரட்டு

*2007 -2008 ஆம் கல்வியாண்டு முதல் சேர்வோர்க்குரியது*

முதல் பருவம்

பகுதி I தமிழ்

# அறிமுகவுரை

*பள்ளிக் கல்வி நிறைவடைந்து பல்கலைக்கழகக் கல்விக்கு வரும் பட்டவகுப்பு மாணவர்தம் கருத்துப் பரிமாற்றத்திறன்* (Communicative skill) *சிந்தனைத்திறன், ஆளுமைத்திறன் ஆகியவற்றை வளர்த்து, வாழ்வியல் விழுமியங்களை உணரச் செய்து, தேசிய உலக ஒருமைப் பாட்டுணர்வை மனத்தில் இருத்தி வாழ்வாங்கு வாழ்வதற்குரிய நேர்முக எண்ணம்* (Positive thinking) *வலுப்பெறும் வகையில் இப்பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.*

*முதற் பருவத்தில், நாட்டுப்பற்று, சமூகம் , பெண்ணியம் குறித்த விழுமியங்கள் சார்ந்த கவிதைகளும், கருத்துப் பரிமாற்றத்திறனுக்கு அடிப்படையாக உள்ள இலக்கணப் பகுதியும், பயிற்சிப் பகுதியும், தன் சுய சிந்தனையுடன் படைப்பாக்கச் சிந்தனைத் திறனை வளர்த்தெடுக்கும் வகையில் சிறுகதைப் பகுதியும், காலவோட்டத்துடன் இணைந்து சிந்திக்கும் ஆற்றலைப் பெறும் வகையில் இலக்கிய வரலாற்றுப் பகுதியும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.*

*இரண்டாம் பருவத்தில், மானுடச் சிறப்பியலை* (Human Excellence) *மையப்படுத்தி, அதன் புரிதிறனை மேம்படுத்தும் வகையில் செய்யுட் பகுதிகளும் உரைநடைக் கட்டுரைகளும் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூலை மாணவர்கள் கருத்தூன்றிக் கற்றுப் பயன்பெறுவார்களாக.*

*தற்கால மாணவர் நிலையைக் கருத்தில் கொண்டு பாடத்திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்; கருத்துப் பரிமாற்றத் திறனுக்கும் மானுடச் சிறப்பிற்கும் முதன்மையிடம் அளிக்க வேண்டும் என்று மிகுந்த ஆர்வத்துடன் ஊக்கப்படுத்தியும், அதற்கான செயற்பாட்டுப் பொறுப்பை ஏற்றும் பல்லாற்றானும் உதவிய மேன்மைமிகு துணைவேந்தர் அவர்களுக்கும், பாடத்திட்டக்குழுக் கூட்டத்திற்கும் மற்ற பணிகளுக்கும் அன்புடன் துணை நின்ற மதிப்பிற்குரிய பதிவாளர் அவர்களுக்கும், நூலாக்கப் பணிக்குத் துணைநின்ற பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் அவர்களுக்கும் பாடத்திட்டக் குழுவினரின் நன்றி உரியது.*

**பாடத்திட்டக் குழுவினர்**

# பாரதியார் பல்கலைக் கழகம்
# கோவை - 641 046

## பாடத்திட்டம் பகுதி I - தமிழ்

## (2007 - 2008) ஆம் கல்வியாண்டில் முதல் பருவத்தில் சேர்வோர்க்குரியது

## பகுதி I - தமிழ் தாள் - 1

## முதற்பருவம் (செய்யுள், சிறுகதை, இலக்கிய வரலாறு, இலக்கணம், மொழிபெயர்ப்பு)

***1. செய்யுள்*** : *செய்யுள் திரட்டு*

*பல்கலைக்கழக வெளியீடு ஜூன் 2007*

***2. சிறுகதை*** : *பாரதி முதல் பிரபஞ்சன் வரை*

*தங்க. செந்தில் குமார் (தொ.ஆ)*

*அய்யா நிலையம்*

*2870, கல்யாண சுந்தரம் நகர், இ.பி. காலனி*

*நாஞ்சிக் கோட்டைச் சாலை*

*தஞ்சாவூர் - 613 006*

### அலகு - 1 நாட்டுப்பற்று

*பாரத தேசம் - பாரதியார்*

*எங்கள் நாடு - பாரதியார்*

*ஒப்பிலாத சமுதாயம் - அப்துல் ரகுமான்*

*பாரதகீதம் - யோகி சுத்தானந்த பாரதி*

### அலகு - 2 சமூகம்

*தோணி வருகிறது - தமிழன்பன்*

*விலாசங்கள் - பா. விஜய்*

*மாங்கல்ய மரமும் தொட்டில் மரமும் - ஆண்டாள் பிரியதர்சினி*

*வாழைப்பூ வேதாந்தம் - சுரதா*

## *அலகு - 3 பெண்ணியம்*

*எலும்புக் கூடுகள் - ம. திலகபாமா*

*பதிவுத் தபால் - ஆழியாள்*

*தற்காத்தல் - பொன்மணி வைரமுத்து*

*அம்மா - செல்வநாயகி*

*சிறுகதை - பாரதி முதல் பிரபஞ்சன் வரை*

## *அலகு - 4 இலக்கணம்*

*பெயர், வினை, இடை, உரிச் சொற்களின் பொது இலக்கணம்*

*ஒற்று மிகும் இடங்கள் - ஒற்று மிகா இடங்கள்*

## *அலகு - 5 இலக்கிய வரலாறு : பாடத்திட்டத்தைத் தழுவியது*

*தமிழ்க் கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் ( மரபுக் கவிதை, புதுக்கவிதை ) தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்*

***பயிற்சிக்குரியன :***

*அலுவலகப் பகுதி, பொதுப் பகுதி ஆங்கிலத்தில் கொடுத்து, தமிழில் மொழிபெயர்க்கச்செய்தல் (ஆங்கிலத்திலிருந்து தமிழ்) இலக்கிய வரலாறு - கட்டுரைகள் எழுதச் செய்தல்*

# முதற்பருவம்

## பொருளடக்கம்

### செய்யுள்

### நாட்டுப்பற்று


*1. பாரத தேசம் - பாரதியார்*

*2. எங்கள் நாடு - பாரதியார்*

*3. ஒப்பிலாத சமுதாயம் - அப்துல் ரகுமான்*

*4. பாரதகீதம் - யோகி சுத்தானந்த பாரதி*


### சமூகம்


*5. தோணி வருகிறது - தமிழன்பன்*

*6. விலாசங்கள் - பா. விஜய்*

*7. மாங்கல்ய மரமும் தொட்டில் மரமும் - ஆண்டாள் பிரியதர்சினி*

*8. வாழைப்பூ வேதாந்தம் - சுரதா*


### பெண்ணியம்


*9. எலும்புக் கூடுகள் - ம. திலகபாமா*

*10. பதிவுத் தபால் - ஆழியாள்*

*11. தற்காத்தல் - பொன்மணி வைரமுத்து*

*12. அம்மா - செல்வநாயகி*

# பாரதியார் கவிதைகள்

## 1. பாரத தேசம்

### ராகம் - புன்னாகவராளி

**பல்லவி**

*பாரத தேசமென்று பெயர்சொல்லு வார் - மிடிப்*
*பயங் கொல்லு வார் துயர்ப் பகைவெல்லு வார்*

**சரணங்கள்**

*1. வெள்ளிப் பனிமலையின் மீதுலவு வோம் ; அடி*
*மேலைக் கடல்முழுதும் கப்பல் விடுவோம்;*
*பள்ளித் தலமனைத்தும்கோயில் செய்குவோம்; எங்கள்*
*பாரததேசமென்று தோள் கொட்டுவோம். (பாரத)*

*2. சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்;*
*சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்;*
*வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்*
*மையத்து நாடுகளில் பயிர்செய் குவோம் (பாரத)*

*3. வெட்டுக் கனிகள் செய்து தங்கம் முதலாம்*
*வேறு பல பொருளும் குடைந் தெடுப்போம்;*
*எட்டுத் திசைகளிலுஞ் சென்றிவை விற்றே*
*எண்ணும் பொருளனைத்தும் கொண்டு வருவோம் (பாரத)*

*4. முத்துக் குளிப்பதொரு தென் கடலிலே;*
*மொய்த்து வணிகர் பல நாட்டினர் வந்தே,*
*நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து*
*நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே (பாரத)*

*5. சிந்து நதியின் மிசை நிலவினிலே*
*சேர நன் னாட்டிளம் பெண்களுடனே*
*சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்*
*தோணிக ளோட்டி விளையாடி வருவோம் (பாரத)*

6. கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்;
சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு
சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம் (பாரத)

7. காசி நகர்ப் புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்;
ராசபுத் தானத்து வீரர் தமக்கு
நல்லியற் கன்னடத்துத் தங்கம் அளிப்போம் (பாரத)

8. பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்;
கட்டித் திரவியங்கள் கொண்டு வருவார்
காசினி வணிகருக்கு அவை கொடுப்போம் (பாரத)

9. ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்;
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்;
ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்;
உண்மைகள் சொல்வோம் பல வண்மைகள் செய்வோம் (பாரத)

10. குடைகள் செய்வோம் உழு படைகள் செய்வோம்;
கோணிகள் செய்வோம் இரும்பாணிகள் செய்வோம்;
நடையும் பறப்பு முணர் வண்டிகள் செய்வோம்;
ஞாலம் நடுங்கவரும் கப்பல் செய்வோம் (பாரத)

11. மந்திரம் கற்போம் வினைத் தந்திரம் கற்போம்;
வானை யளப்போம் கடல் மீனை யளப்போம்;
சந்திரமண டலத்தியல் கண்டு தெளிவோம்;
சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம் கற்போம் (பாரத)

12. காவியம் செய்வோம், நல்ல காடு வளர்ப்போம்;
கலை வளர்ப்போம் கொல்ல ருலை வளர்ப்போம்;
ஓவியம் செய்வோம் நல்ல ஊசிகள் செய்வோம்;
உலகத் தொழிலனைத்து முவந்து செய்வோம் (பாரத)

13. சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே
தமிழ்மகள் சொல்லியசொல் அமிழ்த மென்போம்;
நீதிநெ றியினின்று பிறர்க் குதவும்
நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர் (பாரத)

## *2. எங்கள் நாடு*

### *ராகம் - பூபாளம்*

*1. மன்னும் இமய மலையெங்கள் மலையே*
*மாநில மீதிது போற்பிறி திலையே!*
*இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே*
*இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே?*
*பன்னரும் உபநிடத நூலெங்கள் நூலே*
*பார்மிசை யேதொரு நூல்இது போலே?*
*பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே*
*போற்றுவோம் இஃதை எமக்கிலை ஈடே.*

*2. மாரத வீரர் மலிந்த நன்னாடு*
*மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு*
*நாரத கான நலந்திகழ் நாடு*
*நல்லன யாவையும் நாடுறு நாடு*
*பூரண ஞானம் பொலிந்த நன்னாடு*
*புத்தர் பிரானருள் பொங்கிய நாடு*
*பாரத நாடு பழம்பெரு நாடே*
*பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே*

*3. இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்*
*ஏழைய ராகி இனி மண்ணில் துஞ்சோம்*
*தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்*
*தாய்த்திரு நாடெனில் இனிக்கையை விரியோம்*
*கன்னலும் தேனும் கனியும்இன் பாலும்*
*கதலியும் செந்நெலும் நல்கும் எக்காலும்*
*உன்னத ஆரிய நாடெங்கள் நாடே*
*ஓதுவம் இஃதை எமக்கிலை ஈடே.*

## *3. ஒப்பிலாத சமுதாயம்*

***- அப்துல் ரகுமான்***

*‘ஒப்பிலாத சமுதாயம்’*
*தனித்திருந்தவன்*
*பசித்திருந்தவன்*
*விழித்திருந்து கண்ட கனா!*

*இவ்வுலகில் வாய்க்காது*
*என்றுசில சமயங்கள்*
*அவ்வுலகில் கற்பித்து*
*அமைத்திருக்கும் கற்பனை*

*பொருளியல் அறிஞர்கள்*
*புத்தகத்தில் காட்டும்*
*பூலோக சொர்க்கம்*

*அரசியல் வாதிகளின்*
*அலுக்காத வாக்குறுதி*

*திட்ட ஆண்டிகள்*
*கட்ட முயலும்மடம்*
*பாட்டுப் புலவர்க்கோ*
*நாட்டு நகர்ப்படலம்*

*வறுமையெனும் பாலையிலே*
*வாடுகின்ற மான்களுக்கோ*
*கண்களை ஏமாற்றும்*
*கானல் நீர்!*

*எப்படிக் கூடுவது*
*என்பதிலே பேதங்கள்*
*எப்படி வாழ்வது*
*என்பதிலே குத்துவெட்டு!*
*பயணத்தில் சம்மதம்*
*பாதையிலே தகராறு*

*ஒருசிலர்க்கோ - இது*
*ஆண்டவன் தரவேண்டும்*

ஒருசிலர்க்கோ - இது
ஆயுதத்தால் வர வேண்டும்

‘சமையலறை தான்வீடு’
இதுசிலரின் வேதம்.
‘படுக்கையறை தான்வீடு’
இது சிலரின் வாதம்.

நல்லதொரு சமுதாயம்
நாம்காண வேண்டும்
அதற்காக
எட்டமுடியாத
இலட்சியங்கள் தேவையில்லை.

அடைய முடியாத
ஆகாயக்கோட்டை ஏன்?
எட்ட முடிகின்ற
யதார்த்தக் குரல்போதும்.

அந்தச் சமுதாயத்தில்
ஆறாக வீதியிலே
பாலும் தெளிதேனும்
பாய்ந்தோட வேண்டாம்
இரத்தம் ஓடாது
இருந்தால் அதுபோதும்.

அங்கே-

எழுத்துக்குத் தடையிருக்கும்
இழிந்த தலை எழுத்துக்கு:

பேச்சுக்குத் தடையிருக்கும்
பெருந்திண்ணைப் பேச்சுக்கு:
பத்திரிகைத் தணிக்கையுண்டு
பச்சைக்கும் மஞ்சளுக்கும்:

பொதுக்கூட்டத் தடையுண்டு
பருவ ஆண் பெண்ணுக்கு:
கண்ட கண்ட இடத்தில்
கட்சிக் கொடி யேற்றக்
கட்டாயம் தடையுண்டு
உடைக்குப் பயன்படாது

ஊதாரித் தனமாகத்
துணிச்செலவு ஆவதனால்!

அங்கே-
பதுக்கலுக்கு நிச்சயம்
பாராட்டுக் கிடைக்கும்
பாட்டில் நயங்களைப்
பதுக்கி வைப்பதற்கு!

கள்ளக் கடத்தலுண்டு
காதற்கண் நடத்துகின்ற
உள்ளக் கடத்தலது

கலப்படம் செய்பவர்க்குக்
கைந்நிறையப் பரிசுண்டு
கல்யாணத் தால்சாதிக்
கலப்படத்தைச் செய்பவர்க்கு

கறுப்புப் பணத்திற்கு
கவுரவம் உண்டங்கே
உழைப்பவர் அழுக்குக்
கைகளிலே புரள்வதனால்!

சாதிகள் இருக்குமங்கே
சரித்திரத்தின் ஏடுகளில்:
போர்ப்படைகள் இருக்கும்
பொருட்காட்சி சாலைகளில்

சமுதாய ஒழுங்குக்குச்
சட்டங்கள் இருக்குமங்கே
இடியாக அல்ல
இனிய மழையாக:

நீதிமன்றம் இருக்குமங்கே
நீதியை விற்கும்
சந்தையாக அல்ல
சத்திரத்தின் நிழலாக

அங்கே-
விசாரிக்கப்படுவன
குற்றங்களல்ல
குற்றத்தின் காரணங்கள்

கைவிலங்கு மட்டுமல்ல..
    கையுறையும் அங்கிருக்கும்
    நல்லவை செய்வோரை
    நாடிக் கொடுப்பதற்கு

சிறைகளும் அங்குண்டு
    செல்லும் புழுக்களை
    வண்ணத்துப் பூச்சியாய்
    மாற்றி யனுப்புதற்கு!

அங்கே-
    காவலர் கைகளிலே
    தீவட்டி இருக்காது
    தீபங்கள் இருக்கும்

அங்கே-
    கட்சிநா யகம் அல்ல
    ஜனநா யகம் நடக்கும்

அங்கே-
    வாக்குப் பெட்டிகளைச்
    செயற்கை முறையால்
    சினையாக்க முடியாது
    கருச் சிதைவு செய்யும்
    காரியமும் நடக்காது

அதன் வயிற்றிற்கு -
    அவதாரம் சூல்கொள்ளும்

ஆற்றலிருப் பதுபோன்றே
    ஆணவ அசுரர்களை
    அள்ளி விழுங்குகின்ற
    ஆவேசமும் இருக்கும்!

வாக்குகள்
    எண்ணப்பட மாட்டா
    எடைபோடப் படும்.

அங்கே-
    குடியான வன்வீட்டுக்
    கோழி முட்டையை

அதிகாரி வீட்டு
அம்மி அடைகாக்கும்!

அங்கே-

இதயத்தை ஏமாற்றி
இரக்கத்தைக் கறப்பதற்கு
வைக்கோல் கன்றுகள்
வைப்பவர்க்குச் சிறையுண்டு

இலட்சிய வீடு

எதுவென்றால், மக்கிய
முதுமக்கள் தாழிகளை
முன்கொணர்ந்து வைக்கின்ற
பத்தாம் பசலிப்
பண்டிதர்க்கங் கிடமில்லை

வாய்க்கோயில் பசியால்
வனப்பிழந்து கிடக்க அங்கே
வசிக்கின்ற மொழிக்கு
வழிபாடு நடக்காது

ஆசிரியர், சுரைக்காயின்

சித்திரத்தை யல்ல
வித்தை வழங்குவார்

இறுதியிலே

பட்டம் அளிக்கும்
பயன்படா விழா அல்ல
வேலை அளிக்கும்
விழா நடக்கும்

அங்கே -

திருமணங்கள் சொர்க்கத்தில்
நிச்சயிக்கப்பட மாட்டா
திருமணங்கள் சொர்க்கத்தை
நிச்சயிக்கும்

அங்கே -

மணம் என்றால் பணம் கேட்கும்
ஆண்விப சாரத்தை

பிரம்மச் சரியத்தால்
தண்டிக்கும் நீதியுண்டு!

தாலிக் கயிறு ஒரு
ஆயுள் தண்டனையின்
கழுத்து விலங்காகாது!
திரவப் பெண்மைக்கு
திடப்பொருள் கிண்ணமாய்
ஆண்மை இருக்குமங்கே!
ஆண்மையுடன் போட்டியிடும்
ஆவேசத்தில் அங்கே
மெல்லிய பெண்மை
மீசை வளர்க்காது

பெண்மைக் குரிய
பெண்மை அங்குப்
போற்றப் படுமன்றிப்
பூஜிக்கப் படாது!

அங்கே-
பிரமனுக்குக் கட்டாய
ஓய்வுதரப் படாது!
ஆனால்
வேண்டிய அளவுக்கு
விடுமுறைகள் தரப்படும்

அங்கே-
சமயங்களெல்லாம்
தைக்கின்ற நூலாகும்
கத்தரிக் கோல்களின்
காரியத்தைச் செய்யாது

இனிய கீதை
இந்துக் களையும்
கீர்த்திமிகு பைபிள்
கிறித்தவர் களையும்
முதிர்ந்த குர்ஆன்
முஸ்லீம் களையும்
உற்பத்தி செய்யாமல்
மனிதர்களை உருவாக்கும்

பணமகளுக் கிங்கே
பதிவிரதைத் தன்மை
பாவமென ஆகும்
பரத்தமையே அவளுக்குப்
பாராட்டும் கற்பாகும்
பதிவுத் திருமணம்
பண்ணிவிட்டதாலேயே
பூமிப்பெண் ணுக்கொருவன்
புருஷனாக முடியாது

வியர்வைத் துளிகளைப்
பரிசமாய்த் தருவோர்க்கே
மண்மகள் மனையாவாள்!

அனைவரும் ஓர்நிறை
அல்ல
உழைக்கும் சாதியே
உயர்ந்த சாதி
அங்கே
வயிறுமட்டும் மல்ல
மனமும் நிறைந்திருக்கும்

சுதந்திரம் அங்கே
சுவாசமாய் இருக்கும்
பிறர்தர வாங்கும்
பிச்சையாய் இராது

கடமை அங்கே கவுரவம்
உரிமை அங்கே ஊதியம்
சத்தியம் அங்கே சமயம்
இதயம் அங்கே முகவரி
புன்னகை அங்கே பொதுமொழி

## *4. பாரத கீதம்*

**- யோகி சுத்தானந்த பாரதி**

### *1. எந்தாய் வாழ்க*

*எந்தாய் வாழ்க எனும் மந்திர நாதமே*
*இன்பத்தை ஊட்டுதம்மா - எங்கள்*
*இந்தியப் பாசுரத் தென்றல்வந் திதயத்தின்*
*தந்தியை மீட்டு தம்மா.*

*அன்னை இயற்கையின் புன்னகை அழகிலே*
*அமுதம் சுரக்கு தம்மா - அவள்*
*வன்ன மலைநதி வனங்களில் ஆனந்த*
*ஞானம் பிறக்கு தம்மா*

*தென்மொழி வடமொழித் தேனமு துண்டதும்*
*சித்தம் சிலிர்க்கு தம்மா - மிக*
*உன்னதக் கவிகளின் சன்னத வாக்கில்எம்*
*உள்ளம் தவழுதம்மா*

*சாதி மதநிற பேதமில் லாதொரு*
*சமரசங் காணுதம்மா*
*ஆதவன் கதிர்கள்போல் ஆன்ம ஒருமையில்*
*ஆருயிர் சேருதம்மா.*

### *2. புண்ணிய பூமி*

*புண்ணிய பூமிஎங்கள் பாரதமே*
*பூலோக சுவர்க்கமெங்கள் பாரதமே*
*எண்ணிய தெல்லாம் அளிக்கும் பாரதமே - எம்*
*இதயத் துடிப்பாகும் பாரதமே.*

*தருமமிகுங் குடியரசெந் தாய்நாடு*
*தமிழ்வாணி சாற்றிடுமெந் தாய்நாடு*
*கருமவீரர் தொண்டிசைக்குந் தாய்நாடு*
*கருணையிலே கனிந்தபழஞ் சோலையிதே.*

*வாழும்வகை வாழுமெங்கள் வளநாடு*
*வானரசை நாட்டுமெங்கள் வளநாடு*
*சூழுலகின் கோயிலெங்கள் வளநாடு*
*சுதந்திரமாய்த் தலைநிமிர்ந்த தாய்நாடு*

*முல்லைமணத் தென்றலிலே வான்மருவி*
*மூவர்ணக் கொடிபறக்கும் பாரதமே*
*நல்லநல்ல புலமைவளர் கலைவனமே*
*ஞானசக்தி நிலையமெங்கள் பாரதமே!*

### *3. வீரச் சிதம்பரம்*

*வீரச் சிதம்பரம் பிள்ளை - அவன்*
*விடுதலை விடுதலை விடுதலை என்றே*
*தீரமுடன் பணி செய்தான் - சிறை*
*சென்றவன் செக்கும் இழுத்தான் - கவி*
*பாரதி பாட்டுரு வானான் - சய*
*பாலகங்காதர திலகன் வலக்கை -*
*நீராவிக் கப்பல் விடுத்தான் - தலை*
*நிமிர்ந்து நடக்கும் நிகரற்ற சிங்கம்......*
*எங்கள் சிதம்பரம் என்னில் - வீரம்*
*ஏறுது நெஞ்சினில் சோருது துன்பம்*
*பொங்குதோர் ஆவேச வெள்ளம் - பரி*
*பூரணமான சுதந்தர வாழ்வுக்கு*
*வங்கம் அழைக்குது நம்மை - அதில்*
*வாழி சிதம்பரம் என்றிசைந்தாடும்*
*தங்கக் கொடி தோன்று தையே - தமிழ்*
*தந்த சிதம்பரம் சந்ததம் வாழ்கவே.......*

## 5. தோணி வருகிறது

- தமிழன்பன்

ஊமையிருள் அலைகளிலே
ஒருதோணி வருகிறது!
பூமிமனத் தவமோனம்
புல்லரிக்க வருகிறது.

பெண்கண்ணில் கறுப்பெடுத்துப்
பிசைந்துவைத்த இரவினிலே
விண்வரைக்கும் வியாபித்த
விசுவரூ பஇருளிலே......

பூப்படைந்த வினாக்களுக்குப்
புதுமாலை சூட்டுதற்கு
மாப்பிள்ளை விடைகளேற்றி
வருகிறதோ இத்தோணி!

உயிர்யாழின் நரம்புக்குள்
உறைந்துவிட்ட பாட்டுருக்கும்
வெயிலேற்றி வருகிறதோ
விதியிரவுத் தோணியிங்கே?

இமைச்சிறகுப் பறவைகள்தாம்
இட்டுவைத்த முட்டைக்குள்
குமைகின்ற கதைகளுக்குக்
குறிப்பேடு வருகிறதோ?

இதழோரக் கிரகணத்தில்
இருண்டுவிட்ட ஆத்மாவின்
பதைப்பகற்றும் பனிமலரின்
பகலிளமை வருகிறதோ?

தோல்மினுக்கில் ஈடுபட்டுச்
சுளையுரிமை புறக்கணிக்கும்
மேலோட்டப் பார்வைகட்கு
விதைச்சவுக்கு வருகிறதோ?

கடிகார முள்ளாலே
காயமுற்ற ஆன்மாவின்

துடிப்புக்கு மருந்தெடுத்துத்
தோணியிங்கு வருகிறதோ?

கறுத்தபகல் நாள்களிலே
காவியிருள் அலைகளிலே
உறுத்தலுற்ற வர்க்கத்தின்
உயிர்விழிப்பு வருகிறதோ?

போதனையைப் புறந்தள்ளிப்
போராட்டக் கருவியுடன்
போதிமரத் தோணியிது
புறப்பட்டு வருகிறதோ?

## *6. விலாசங்கள்*

***- பா. விஜய்***

* *உண்மையே!*

*நீ*

*எங்கே இருக்கிறாய்?*

*நீதிபதியின் சட்டப் புத்தகத்திலா?*

*மனுநீதியின் ஆராய்ச்சி மணியிலா?*

*என்றேன்!*

*உண்மை சொன்னது,*

*'குழந்தையின் முகத்தில்*

*நான்*

*இருக்கிறேன்' என்று!*

* *கற்பே!*

*நீ*

*எங்கே இருக்கிறாய்?*

*பெண்ணின் நடத்தையிலா*

*ஆணின் நடத்தையிலா?*

*என்றேன்!*

*கற்பு சொன்னது,*

*'தண்ணீரைத் தவிர*

*வேறெதையும்*

*அணைக்க விடாத*

*நெருப்பில் நான் இருக்கிறேன்' என்று!*

* *பாசமே*

*நீ*

*எங்கே இருக்கிறாய்?*

*மனைவியின் புன்னகையிலா?*

*வாரிசின் கொஞ்சலிலா?*

*என்றேன்!*

*பாசம் சொன்னது,*

*'உன் வீட்டு*

*நாய்க் குட்டியிடம்*

*நான் இருக்கிறேன்' என்று*

* நம்பிக்கையே!
நீ
எங்கே இருக்கிறாய்?

சாதனையின் சிகர நுனியிலா?
சரித்திரத்தின் கிரீடக் கல்லிலா?
என்றேன்!

நம்பிக்கை சொன்னது,
'பூகம்பத்திற்குப் பிறகு
அந்தப் பூமியில் துளிர்க்கும்
முதல் விதையில்
நான் இருக்கிறேன்' என்று!

* வாழ்க்கையே!
நீ
எங்கே இருக்கிறாய்?

பிறப்பின் புன்னகையிலா?
இறப்பின் அழுகையிலா?
என்றேன்

வாழ்க்கை சொன்னது,
'இரண்டுக்கும் இடைப்பட்ட
போராட்டத்தில்
நான் இருக்கிறேன்' என்று!

* காதலே!
நீ
எங்கே இருக்கிறாய்?

தூய்மையான மனசிலா?
சாகாத கவிதையிலா?
என்றேன்.

காதல் சொன்னது,
'எத்தனை தடைகள் வந்தாலும்
வாழ்வோடு இணைந்து விடுகிற
மரணத்தின் பிடிவாதத்தில்
நான் இருக்கிறேன்' என்று!

* *வெற்றியே!*

*நீ*

*எங்கே இருக்கிறாய்?*

*மன்னர்களின் மணிமுடியிலா?*

*போர்க்களத்தின் ஓசைகளிலா?*

*என்றேன்.*

*வெற்றி சொன்னது,*

*'புதுப்புது*

*லட்சியங் கொண்ட*

*பார்வையில்*

*நான் இருக்கிறேன்' என்று!*

* *இறைவா!*

*நீ*

*எங்கே இருக்கிறாய்?*

*இந்துவின் கோயிலிலா?*

*முஸ்லீமின் மசூதியிலா?*

*என்றேன்.*

*இறைவன் சொன்னான்,*

*'இந்த இருவரும்*

*ஒருவரை ஒருவர் பார்த்துப்*

*புன்னகைத்துக் கொள்ளும்*

*புன்னகையில் நான் இருக்கிறேன்' என்று!*

*('வானவில் பூங்கா' என்ற கவிதைத் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டது)*

## 7. மாங்கல்ய மரமும் தொட்டில் மரமும்

**-ஆண்டாள் பிரியதர்ஷினி**

*விநோதம்*
*இந்த மரத்தின்*
*இலைகள்*

*கனவுகளே இலையாகித்*
*துளிர்த்து முதிர்ந்து*
*சருகாகும்*

*மாங்கல்ய விழுதுகளில்*
*ஊசலாடும்*
*யுகாந்திர நம்பிக்கை*

*மஞ்சக் கொம்புகளோ*
*பெருமூச்சுப் பத்தாயம்*

*தான் மணப்பெண்ணாக*
*முதலில்*
*மரத்துக்கு மாங்கல்ய ஒத்திகை*

*பிரகாரம் நிறைக்கும்*
*முதிர்கன்னிகளின்*
*விரக்தி நீர்தான்*
*மர ஈரம்*

*பாட்டியினது*
*அம்மாவினது*
*மகளினது*
*பேத்தியினது*
*கொள்ளுப் பேத்தியினது*

*நம்பிக்கைக் கயிறுகள்*
*பரம்பரை யானவை*

*அடுத்துத் தொங்கும்*
*தொட்டில் மரம்*

*கட்டை விரல் நீளம்*
*உள்ளங்கை அகலமாய்க்*

*கர்ப்பக் கனவைத்*

*தொட்டி விடுகிறார்கள்*

*சூல் வரும் வரைக்கும்*

*மரத்துக்கு மகசூல்*

*எல்லோருக்கும்*

*எல்லாம் கிடைக்கச் செய்யும்*

*மரம் மட்டும் ஒற்றையாகவே*

*எல்லாம் சரிதான்*

*ஒவ்வொரு மரமாய்*

*வெட்டி வீழ்த்துகின்ற*

*பொட்டல் வாழ்க்கையில்*

*நாளை எங்கே கட்டுவார்கள்*

*தாலிக் கயிறும்*

*தூளிக் கயிறும்?*

*( 'சுயம் பேசும் கிளி' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்ட கவிதை.)*

## *8. வாழைப்பூ வேதாந்தம்*

***- சுரதா***

*பெருங்கீர்த்தி பெற்றஷெல்லி பிறந்த நாட்டில்*
*பிறந்தவரே! லார்டுபெண்டிங் துரையே! நாட்டின்*
*வருங்காலம் அறிந்தவரே! வணக்கம்! சொல்லில்*
*வல்லவரே நல்லவரே வணக்கம்! உள்ளம்*
*திருந்தாத முழுமூடர்இந்த நாட்டில்*
*தீமைபல புரிகின்றார். எனவே அன்பே*
*உருவான பெண்டிரெல்லாம் அடிமை யாகி*
*உறைக்கிணறு செய்கின்றார் கண்ணீராலே!*

*உயிலெழுதி வைத்துவிட்டுக் காசி என்னும்*
*ஊருக்குச் செல்லுமிவர், காட்டி லாடும்*
*மயிலழகைப் பார்ப்பதிலை: அறிவு மிக்கோர்*
*வரலாற்றைப் படிப்பதில்லை: சுடரைக் கொண்டு*
*வெயிலெழுதும் வானத்தை மதிப்ப தில்லை:*
*வேல் வளர்க்கும் வீரத்தைப் புகழ்வ தில்லை:*
*கயவர்களின் பதர்க்கதையாம் புராண மென்றால்*
*காதாரக் கேட்கின்றார் போற்று கின்றார்!*

*நெருப்பினிலே நெய்யூற்றி வேள்வி செய்தே*
*நேரத்தைப் பாழாக்கி ஒவ்வோர் நாளும்*
*சிரிப்பினிலே மனஞ்செலுத்தி உண்டு றங்கிச்*
*சிறுசெயலில் ஈடுபடும் வைதீ கத்தார்*
*கரிப்பினிலே துவர்ப்பினிலே புளிப்பு காரம்*
*கசப்பினிலே மனஞ்செலுத்தி மகிழ்வா ரன்றி*
*இரக்கமிலா நெஞ்சத்தார் ஒருநா ளேனும்*
*இனிப்புமிகு பொருள்தேட முயல்வ தில்லை.*

*மைகண்ட விழிமாதர் வெளிப்பு றத்தில்*
*வரக்கண்டு வெறிபிடித்த மனத்த ராகி*
*நொய்கண்ட கோழியெனக் கொத்தச் செல்வர்*
*நூதனமாய் வைதீகம் பேசிப் பேசிக்*
*கைகண்ட பேர்வழிகள் அவர்கள்! ஆட்டின்*
*கறிகண்டால் விடமாட்டார்! பணத்தைமூடும்*
*பைகண்டார் பாயகலம் கண்டார் அன்றிப்*
*படிப்பகலம் கண்டவரே யாரு மில்லை!*

*சாதியென்பார் மதமென்பார் சங்க டத்தைச்*
*சடங்கென்பார் சாத்திரகோத் திரங்க ளென்பார்*
*நீதியென்பார் மனுநீதி சிறந்த தென்பார்*
*நிலையற்ற உடலென்பார் நெய்பால் உண்பார்*
*வேதியர்யாம் வீதியர்நீர் என்பார், எல்லாம்*
*விதியென்பார் வினையென்பார் வேதமென்பார்*
*ஓதுகலை ஒருசிலர்க்கே உரிய தென்பார்*
*ஊழ்வினையே வையத்தின் வரலா றென்பார்!*

*புண்ணுக்கு மருந்தறிவார் இரும்பின் மீது*
*பொருந்தியுள்ள துருநீங்க வழியும் சொல்வார்*
*கண்ணுக்கு மருந்தறிவார்: பயிரோ டுள்ள*
*களையகற்றும் கலையறிவார்: தெய்வ பக்தி*
*விண்ணுக்கு நமையனுப்பி வைக்கும் என்றே*
*வேதாந்தம் பேசிடுவார்: நாட்டில் தோன்றும்*
*சண்டைக்கும் சாதிமத நோய்க ளுக்கும்*
*சரியான மருந்தைமட்டும் அறிந்தா ரில்லை*

*கனியறிவார் காயறிவார் எனினும் காதற்*
*கனியிலுள்ள சுவையதனை அறிய மாட்டார்*
*தினையறிவார் நெல்லறிவார் குறிஞ்சிக் காதல்*
*திணைகூறும் நுட்பத்தை அறியமாட்டார்*
*மனையறிவார் நிலமறிவார் மனைவி என்பாள்*
*மனைக்குவிளக் கென்பதனை அறிய மாட்டார்*
*இனியறிவார் என்பதற்கும் வழியே இல்லை*
*ஏனென்றால் பகுத்தறிவே அவர்கட் கில்லை!*

*அல்லிப்பூ முல்லைப்பூ தாம ரைப்பூ*
*அத்தனையும் வானத்தை நோக்கிப் பூக்கும்*
*மெல்லியநல் வாழைமட்டும் தலைகு னிந்து*
*வீதிமண்ணைப் பார்த்தபடி பூக்கும்: நாட்டின்*
*நல்லவர்கள் என்கருத்தை ஆதரிக்க*
*நாலைந்து வைதீக வெறியர் மட்டும்*
*வல்லமையே இல்லாமல் கூவு கின்றார்*
*வாழைப்பூ வேதாந்தம் பேசு கின்றார்!*

*உருவமிலாக் கடவுளுக்கேன் உருவம்? இங்கே*
*உளிகொண்டு செய்கின்ற சிலையோ தெய்வம்?*
*இருவிழிபோல் மிகச்சிறந்த மாதர் தம்மை*

ஏன்இழிவாய்ப் பேசுகின்றீர்? உலகம் போற்றும்
அரியசெயல் செய்யுங்கள், வீணில் ஏனோ
அருச்சனைகள் செய்கின்றீர்? என்று கேட்கும்
பெரியதொரு சீர்திருத்தச் சங்கம் வைத்துப்
'பிரமசமாசம்' நடத்தி வருகின் றேன்யான்

பெற்றோரால் மூன்றுமுறை விரட்டப் பட்டேன்
பித்தர்களால் கங்கையில்நான் தள்ளப் பட்டேன்
கற்கால நெஞ்சத்தார் விட்டெ றிந்த
கற்களினால் ஓர்நாள்நான் தாக்கப் பட்டேன்
முற்றாத சிறுவயதில் திபேத்து நாட்டில்
முட்டைமனத் தோனெருவன் வெட்ட வந்தான்
சிற்றாடைப் பெண்ணொருத்தி உதவிசெய்ய
திபேத்தில்நான் உயிர்தப்பி வங்கம் வந்தேன்.

கன்பூஷ்யஸ் என்பவனோர் சீனஞானி:
கற்றறிந்த மாமேதை: உலகம் போற்றும்
அன்பாளன் அவன் தந்தை ஹூலி யாங்ஹை
அவனுயரம் பத்தடியாம்! சென்ற திங்கள்
முன்கோபத் தோடென்னை வெட்ட வந்த
முட்டாளும் அவனுயரம் இருப்பான்! கல்வி
முன்னேற்ற மில்லாதார் வைத்திருக்கும்
மூலதனம் வேறென்ன கோபந் தானே!

“கோபத்தில் உருவாகும் நிறமே என்னைக்
குறைகூறும் அனைவர்க்கும் அந்தி வானம்!
தீபத்தால் வீடுபற்றி எரியுமன்றித்
தீட்டியதோர் ஓவியம்போல் விளங்கும் வீடு
சாபத்தால் எரிவதில்லை" என்று ரைத்தேன்.
தற்குறிகள் தாக்கவந்தார், அறிஞர்க் கெல்லாம்
ஆபத்தே ஆகாரம்! துன்பம் ஒன்றே
அவர்க்கிந்த உலகுதரும் பரிசு போலும்!

போர்வாய்ந்த போர்வேந்தன் சந்தர குப்தன்
பிறராலே தீங்குவரும் என்றே அஞ்சி
ஓர்நாளைக் கோரிடத்தில் உறங்கு வானாம்!
உண்மையிலே என்நிலையும் இதுதான். ஆணி
வேர்போன்ற பஞ்சாங்கப் பகைவர் தீமை
விளைவிக்கக் கூடுமெனக் கருதி நல்ல

கூர்வாய்ந்த கத்தியொன்றை மடியில் வைத்துக்
கொண்டுள்ளேன் நானென்னைக் காத்துக் கொள்ள.

வடந்தொட்டுத் தேரிழுக்கும் இந்தி யாவின்
மனக்கோணல் அறிந்தவரே! வைசி ராயே!
புடம்பட்ட பசும்பொன்னைப் போன்ற பெண்கள்
பூவோடும் பொட்டோடும் மஞ்ச ளோடும்
உடன்கட்டை ஏறிவரும் வழக்க மிங்கே
உண்டென்ப தறிவீர்நீர்: ஆய்ந்து பார்த்தால்
முடம்பட்ட நெஞ்சத்தார் புகுத்தி விட்ட
முழுமூடத் தனமென்ற முடிவே தோன்றும்

குழந்தைகளை ஈன்றிடவோ இந்துப் பெண்கள்
குலவிமகிழ்ந் திருப்பதற்கோ பார்சிப் பெண்கள்
அழகொடுதம் இல்லத்தை வைத்துக் கொள்வோர்
ஆப்கானி தேசத்துப் பெண்கள் என்பர்.
பழையகதை இவையனைத்தும் இன்றோ இந்துப்
பத்தினிகள் உடன்கட்டை ஏறவேண்டும்
விழியிலொன்று கெட்டுவிடின் முகத்தில் மற்றோர்
விழிவாழக் கூடாதோ? கூடா தாமே!

கால்கழிந்த கட்டிலென்னும் பாடை மீது
கதைமுடிந்தசதைப்பிணத்தைப் படுக்க வைத்தே
நால்வரதைச் சுடுகாடு சுமந்து செல்லல்
நடைமுறைதான் நாமிதனை அறிவோம்: ஆனால்
பால்நிலவுப் பத்தினியும்பாடை மீது
படுப்பானேன்? உடன்கட்டை ஏறு வானேன்?
வேல்தொடரும் விழியுடையாள் கணவ னோடு
வெந்துவிட வேண்டுமென்ப தென்ன நியாயம்?

வேலையினால் உடல்தளர்ந்தும் வேளா வேளை
விழித்திருந்தும் பசித்திருந்தும் காத்திருந்தும்
காலமெலாம் கணவனுக்குத் தொண்டு செய்தும்
கருவடைந்தும் அதனாலே அழகி ழந்தும்
தாலியெனும் வேலிக்குள் இருந்து வாழும்
தையல் செத்தால் அவள்கணவன் சாவ தில்லை!
மாலையிட்ட மணவாளன் மாண்டு போனால்
மனையாட்டி ஏன்சேர்ந்து சாக வேண்டும்?

*சொந்தமொழி யாம்வங்கம் அரபி கிரேக்கம்*
*சுவைசொட்டும் மராட்டிமொழி இனிக்கும் ஈப்ரூ*
*இந்தி வடமொழி சிறந்த லத்தீன் பார்சி*
*இவற்றோடுநான் ஆங்கிலமும் அறிவேன்: பெண்கள்*
*சந்ததியை இவ்வாறு தீயில் தள்ளும்*
*சம்பவத்தைப் பிறர்நூலில் படித்த தில்லை!*
*மந்திரங்களை முணுமுணுக்கும் இந்தி யாவில்*
*மட்டுந்தான் இக்கொடிய வழக்க முண்டு!*

*'பெருந்துன்பம் தருகின்ற தீயில் வாழும்*
*பேதையரே கேளுங்கள்' உங்கள் வாழ்வை*
*விருந்தென்று கருதுங்கள்: செயற்கைச் சாவை*
*விரும்புவதால் புதுநன்மை பெறவே மாட்டீர்!*
*மரங்கொண்ட கனியொன்று வீழ்ந்த தென்று*
*மரக்கிளையோ அம்மரமோ வீழ்வ துண்டோ?*
*திருந்துங்கள் என்றாலும் கேட்ப தில்லை*
*திருத்துகின்றோம் என்றாலும் விடுவ தில்லை!*

*சித்திரப்பெண் பத்தினியும் காஷ்மீ ரத்தில்*
*சிற்சிலரும் செஞ்சியிலோர் பதுமைப் பெண்ணும்*
*கத்துகடல் முத்தரசன் ராச ராசன்*
*காலத்து மங்கையரும் தீயில் தூங்கிச்*
*செத்ததைநாம் வரலாற்றில் அறிவோம் அன்னார்*
*தேன்வாழ்வை ஏன்கெடுத்துக் கொண்டா ரென்றால்*
*பத்தினிமார் உடன்கட்டை ஏறிச் செத்தால்*
*பரலோகம் கிட்டுமாம் எனவே செத்தார்!*

*குன்றெறிந்த நெடுந்தோளான் விரிந்த வட்டக்*
*குடைநிழலில் வீற்றரசு செய்த ஹர்ஷன்*
*என்பவனை ஈன்றெடுத்த மங்கை: மன்னன்*
*இறந்தவுடன் உடன்கட்டை ஏறி னாளாம்*
*தென்திசையைப் பொன்திசையாய் மாற்றி வீரத்*
*திறங்காட்டி அரசாண்ட பூதப் பாண்டி*
*மன்னவனின் பொன்மனைவி தீயில் வெந்து*
*மாண்டாளாம் மாமன்னன் மாண்டான் என்றே!*

*எதுவரையில் வானத்திற் கெல்லை யுண்டோ*
*எங்கெங்கு வாய்ப் பேச்சு வழக்க முண்டோ*
*அதுவரையில் அங்கங்கே சிறந்து நிற்போன்*

அசோகனென்பான் அரசாண்ட நாளில் ஆமை
முதுகெனவே நெடுஞ்சாலை அமைத்தான் மக்கள்
முன்னேறக் கலைக்கூடம் கட்டி வைத்தான்
புதுமைபல செய்திட்டான் எனினும் இந்தப்
பொய்மரண வழக்கத்தை ஒழித்தா னில்லை.

தசரதன்தான் தடுத்தானா? கேடு கெட்ட
தத்துவத்தை இராமன்தான் தடுத்திட் டானா?
அசைவறியா வீரத்தால் விவேகத் தாலே
அரசாண்ட மூவேந்தர் தடுத்த துண்டா?
பசையறியாக் கற்களினால் சிலைகள் செய்த
பல்லவர்க்கோ கன்னடர்க்கோ தெலுங்கு பேசும்
விசயநகர் வேந்தர்க்கோ கீதை தந்த
விட்டுணுக்கோ தீமையென்று பட்ட துண்டோ?

கொடிதான இவ்வழக்கம் ஒழிய வேண்டிக்
கோவேந்தர் அக்பரவர் முயன்ற போது
“தடை போட முயலாதே மன்னா" என்றே
சத்தமிட்டார் வைதீக வெறியர் தூக்க
முடியாத மிகப்பெரிய பாராங் கல்லை
முத்தமிட்டுப் பேசாமல் போதல் போலப்
பிடிவாதக் காரரெல்லாம் எதிர்த்த தாலே
பேரரசர் திட்டத்தை விட்டு விட்டார்!

மாங்கனியில் தூங்குகின்ற சுவையே போலும்
மராட்டிமொழி இனிக்குமென்றும் காளி தாசன்
பாங்குடைய காவியத்தைத் தாங்கி நிற்கும்
பழுத்தபுகழ் வடமொழியே சிறந்த தென்றும்
வீங்குடலார் பேசிவரும் இந்தி ஒன்றே
வேற்றுமையைப் போக்குமெனக் கூவ “எங்கள்
ஆங்கிலம் அனைவரையும் இணைத்து வைக்கும்
அரியமொழி” என்றுரைத்த துரையே கேளும்

பிறந்தாரை நீராட்டிப் பேணிக் காத்துப்
பெருகவளர்த் திடுவதனை எங்கும் கண்டோம்
இறந்தாரைச் சுடுவதையும் காணு கின்றோம்
இங்கினிமேல் இக்கொடியவர் இரவில்தூங்கி
மறந்தாரைச் சுட்டாலும் சுடுவர்! அன்பு
மனமில்லார் எதைச்செய்யத் துணிய மாட்டார்?

வெறுங்கோயில் வெறிபிடித்தோர் செய்யும் தீமை
விடத்தைவிடக் கொடிதான தீமையாகும்!

மூலபலம் மிக்கவனாம் தெலுங்கு நாட்டின்
முடிவேந்தன் கிருஷ்ணதேவ ராயன் என்பான்
காலையிலே எழுந்தவுடன் தழும்பு பட்ட
கட்டுடலில் நல்லெண்ணெய் பூசு வானாம்!
போலிமதப் பித்தரிங்கே சிலைமீ தன்றோ
பூசுகின்றார் நல்லெண்ணெய்! இவர்போன் றாரை
நாலிரண்டு தலைமுறைநாம் விட்டு வைத்தால்
நாட்டுமக்கள் நான்குகால் விலங்கே யாவர்!

நெருஞ்சிமுள்ளை மெதுவாகத் தொட்டால் கையில்
நிச்சயமாய்க் குத்திவிடும் காயஞ் செய்யும்
கரங்களினால் நாமழுத்திப் பிடித்தோ மாயின்
கட்டாயம் அந்நெருஞ்சி நொறுங்கிப் போகும்
நெருப்பதனில் விழச்சொல்லி வற்பு றுத்தும்
நீசரைநீர் எச்சரிக்கை செய்வீ ராயின்
பெருங்கொடுமை நிச்சயமாய்த் தீரும்! தங்கள்
பெயருமிந்தப் புவிமீது நிலைத்து நிற்கும்!

பழிவந்தால் பயப்படுவர் மேலோர்: வாட்டும்
பசிவந்தால் பயப்படுவர் தாழ்ந்த மக்கள்.
மழைவந்தால் குயில்கலங்கும் துரையே தாங்கள்,
மழைபோலும் பசிபோலும் ஆவீ ராயின்
இழைதந்த இடையுடையார் தம்மைத் தீயில்
இழுத்தெரியும் கூட்டத்தார் அடங்கிப் போவர்.
குழைதொங்கும் மடவாரின் நிலையும் மாறும்
குளிர்நதிபோல் நீண்டோடும் அவர்கள் வாழ்நாள்!

விந்தைபல கற்றவரே தீராத் தீமை
விளைத்துவந்த பிண்டாரிக் கூட்டம் தன்னை
அத்திமரத் தின்பழத்தை நண்டின் கூட்டம்
அடிவைத்து மிதிப்பதுபோல் மிதித்தீர்! இன்னும்
எத்தனையோ அரியசெயல் புரிந்தீர்! தங்கள்
இதயத்தில் நல்லெண்ணெம் இருப்ப தாலே
சித்திரத்தேர் தீப்பற்றி எரிதல் போன்ற
தீச்செயலைத் தடுப்பீரென் றெண்ணு கின்றேன்.

இப்படிக்கு

**இராசாராம் மோகன்ராய்**

## *9. 'எலும்புக் கூடுகள்'*

***- திலகபாமா***

*புழுவுடல் மறைத்து மின்னும்*
*பட்டுப் பூவாடை தரித்து*
*வாசங்கள் தின்று*
*திகட்டும் தேன்கள் பருக*
*மலருக்கு மலர் தாவித் திரியும்*
*வண்ணத்துப் பூச்சிகள்*
*நீட்டும் சந்தேகச்*
*சுட்டு விரலென்னவோ*
*பூக்கள் பக்கம் தான்.*

*பூக்களை வைத்து*
*புழுக்களும், பூச்சிகளும்*
*புனையும்நாடகங்களின்*
*மேடையிலெங்கும்*
*கொய்யப்பட்ட தலைகளும்*
*தீக்குளித்த கற்புகளும்*
*அளிக்கப்பட்ட சாபங்களும்*
*எச்சங்களாய்*
*எச்சங்களில் வெளிப்பட்ட*
*ஆல் விதைகள் பனைதுளைக்க*
*சுட்டும் விரலின் திசைமாற்றம்*

*பாஞ்சாலிகளைச் சுற்றி*
*நூறாயிரம் கௌரவர்களும்*
*தலைகுனிந்த பாண்டவர்களும் இன்றும்*
*காணாமல் போன கண்ணன்கள்*
*உரித்த உரிப்பில் நிர்வாணமாய் மட்டுமல்லாது*
*சதையும் தொலைத்து நிற்கும்*
*எலும்புக் கூட்டு ஆண் சமுதாயம்*

*( 'சூரியாள்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது.)*

## *10. பதிவுத்தபால்*

***-ஆழியாள்***

*அன்புள்ள பரமபிதாவுக்கு*
*புவியைத் திரட்டி உருட்டிப்*
*படைத்தது முழுக்க நீர்தான் என*
*பலரும் சொன்னதை மனதில் வைத்தே*
*உம்மோடு பேச விழைகிறேன் - இல்லாவிடின்*
*உமக்கும் எனக்கும் வேறென்ன*
*தொடர்பு இருக்கலாம்?*

*சரி, நேரே விடயத்துக்கு வரலாம்*
*நான் அட்டக் கறுப்பி*
*அவன் ஆயிரம் பொன்.*
*நான் பொட்டை நாய்*
*அவன் ஆம்பிளைச் சிங்கம்.*
*நான் வேசை*
*அவன் சேத்துல மிதிச்சு ஆத்தில துடைக்கலாம்.*
*நான் மலடி*
*அவன் சாண்பிள்ளை எண்டாலும் ஆண்பிள்ளை.*
*நான் ஊரோடி*
*அவன் சமூகத் தொண்டன்.*
*என் பேச்சு அரட்டை, நான் வாய்க்காரி*
*அவன் பேச்சு சிந்தனை, அவன் பேச்சாளி.*
*அத்துடன்*

*அவன் -*
*மகன் - மேற்படிப்பு முடிச்சாச்சாம்*
*நல்ல வேலையில் இருக்காராம்*
*அப்பா - பதவி உயர்வு கிடைச்சாச்சாம்*
*குணத்தில் அவர் சிறு குன்றாம்*
*தாத்தா - சொன்ன சொல்லை ஊர் தட்டாதாம்*
*வண்ணக்கர் நேரே சொர்க்கத்துக்காம்*

*மகள் - தீ வயித்திலயாம்*
*கெதியா கரையேத்தட்டாம்*

*நான் - அம்மா - குங்குமமும் கொடியும் மங்களமாம்*
*உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகாம்*
*குடும்பச் சமாச்சாரம் சுவர் நாலுக்குள்ளாம்*
*அப்புறம்*
*குழந்தை கெட்டது என்னாலாம்*

*பாட்டி - சுமங்கலியாய்ப் போனால்*
*எல்லாம் சரியாயிருமாம்*

*ஆதலால் பரமபிதாவே!*
*நீ வெண்தாடியோ, சடாமுடியோ*
*அர்த்த நாரீஸ்வரனோ, அருவமோ, உருவமோ*
*ஆராய் வேண்டிலும் இருந்து விட்டுப் போம்*
*ஆனால் ஈரேழு உலகங்கள்*
*அண்டம் ஆகாசம் என்று அறளைபத்தாமல்*
*அடுத்த தடவை தன்னும்*
*உருப்படியாப் படையும்*
*ஒரே ஒரு உலகத்தை*

*('உரத்துப்பேசு' என்னும் கவிதை நூலிலிருந்து எடுக்கப்பட்ட கவிதை)*

## *11. தற்காத்தல்*

***- பொன்மணி வைரமுத்து***

*நலம்தானா தோழி?*
*நாள் பலவாயின உன்*
*நலம் கேட்டு......*

*மனையறத்தோடு*
*அனைத்தறம் புரியும்*
*நவீனப் பெண்ணே!*

*நீ*
*அகிலங் காப்பதில்*
*அறிவொளி காண்பதில்*
*ஆணுக்குச் சரிநிகர் சமானம்*
*அர்த்தநாரீசுவரச் சத்தியம்*

*நல்லவள் வல்லவள்...ஆயின்*
*நாளுக்கு நாள் ஏன்*
*நலிந்து மெலிந்தாய்?*

*அலுப்பும் சலிப்பும்*
*அடிக்கடி கண்களில்*
*அலை பாய்வதேன்?*

*அன்புள்ளவளே!*
*எங்கே தொலைத்தாய்*
*உன்*
*அழகை அன்பை*
*உற்சாகத்தை?*

*பாதந் தொட்ட பட்டுக் கூந்தல்*
*கொட்டிப் போனது பார்த்தாயா?*

*பூமுகம் காய்ந்து*
*சருகாய்ப் போனதை.....*
*மூக்கில் நெற்றியில்*
*முதுமையின் சிரிப்பை....*

*பேச்சில் செயலில்*
*பேய்மையின் தெறிப்பை....*
*கொண்டவன் குழந்தை*
*யார் கண்டாலும்*
*கோபமே ரூபமாய்....*

*என்ன குழப்பம்?*
*ஏன்தான் வருத்தம்?*

*கடமை உரிமை*
*இரண்டில் எதுவென*
*மிரண்ட மயக்கமா?*

*புரட்சி மிரட்சி*
*வளர்ச்சி தளர்ச்சி*
*ஆளுமை அடிமை*
*இருவேறு முகங்கள்*
*உன்னிடம் காண்கிறேன்*

*முன்னொரு காலும்*
*பின்னொரு காலுமாய்*
*முரண்பட்ட நடையை*

*ஞானம் வளர்ந்தால்*
*வானமே கூரை*
*வீடெதற்கு என்ற*
*சித்தாந்தக் கொம்பு*

*நீ பிடிப்பது*
*செங்கோலா*
*பிரம்பா என்று*
*சிலநேரம் புரியவே யில்லை.*

*பெண்ணுரிமை என்பது*
*கூண்டை விட்டுக்*
*கிளி பறத்தலா?*
*அடங்கி இருத்தலா?*

*உன்னை வளர்த்து*
*மண்ணை வளர்த்தல்*

*சுதந்திரம் என்பதைச்*

*சொல்லில் பழகு*

*கர்மயோகத்தின்*

*கலியுகப் பொருள் நீ*

*கலியழிக்க வந்தவள்*

*கலங்கிப் போகிறாய்.*

*கடமை, உரிமை*

*உன்னிரு கண்கள்*

*உன்வீடொரு வானம்*

*வானம்பாடி நீ*

*உனைச்சுற்றி வரைவாய்*

*உற்சாக வட்டம்*

*உன் வீட்டுக்குள்*

*உனக்குக் கிரீடம் ஏன்?*

*உன்னை நீயே சீராட்டிக் கொள்.*

*புதையலைப் போல்*

*உனக்கான நேரத்தைக்*

*கண்டெடுத்துக் கொண்டாடு.*

*பிடித்த உடை*

*உணவு*

*கொள்கை*

*பிடிவாதமாய்ப் பின்பற்று*

*உனக்குள் இருப்பவள் சக்தி*

*அவளைப் போற்று*

*அலங்கரி*

*கொண்டாடு.*

*அந்தச்*

*சக்தியைக் காத்தலே*

*தற்காத்தல்.*

*இன்னும் நீ*

*அதே பெண்*

*அதே முகம்*

*ஆதிதேவி நீ*

*மீண்டும் மீண்டும் இம்*
*மந்திரச் சொல் மொழி*
*மீண்டும் சொர்க்கம்*
*உன்னிடம் மீளும்*

*வள்ளுவன் சொல்நினை*
*தற்கொண்டவன் சுற்றம்*
*குழந்தை காக்குமுன்*
*தற்காத்தல் பெண்ணின்*
*தலையாய கடமை*

*உன்னைக் காத்து*
*மண்ணைக் காத்துவா*
*உனக்குள்*
*சக்தி வளர்வாள்*

*('மீண்டும் சரஸ்வதி' என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டது.)*

## *12. அம்மா*

**செல்வநாயகி**

*திரும்பிப் பார்த்தால்*
*எல்லாம் மகிழ்ச்சிதான்*

*உருவமேயின்றி*
*உள்ளேயிருந்தபோதும்*
*தடவிப்பார்த்து உன்னை*

*உணர்ந்திருக்கிறேன்*
*கைகால்களை அசைத்துநீ*
*உன்னை உணர்த்தியபோதும்*
*தாய்மையின் பூரிப்பில்*
*சிலாகித்திருந்தேன்*

*உன்பிஞ்சு முகத்தைக்*
*கற்பனை பண்ணியே*
*என் காயங்களை*
*மறந்திருக்கிறேன்*

*உன் சத்தமில்லா உதைகளும்*
*மலரின் முத்தங்களாய்*
*மகிழ்ச்சியே தந்தது*
*வலித்ததில்லை ஒருபோதும்*
*இப்போதுதான்*
*கவலையாயிருக்கிறது*

*முளைக்கத் துடிக்கும் விதையாய்*
*உலகிற்கு உன்*
*வருகையை அறிவிக்கத்*
*தேதி பார்க்கிறாய்*

*சாலைகளில் நடக்கும்போதும்*
*சமையலறையில் குனியும்போதும்*
*கவனமாயிருந்து என்*
*கருப்பை உலகினுள்*

காப்பாற்றி வந்தேன் கடந்தகாலத்தில்

வருங்காலத்தில் அப்படி இல்லை

அசுத்தமான காற்றிலிருந்து

சுத்தமில்லாத நீரிடமிருந்து

பயமுறுத்துகிற பாடத்திட்டத்திலிருந்து

பக்கத்திலிருக்கிற போலிகளிலிருந்து

பாசாங்கு காட்டும் உலகிடமிருந்து

பாசத்தை மறந்த உறவுகளிடமிருந்து

உன்னைப்

பத்திரமாகக் காப்பாற்ற வேண்டுமே

இப்போதுதான்

கவலையாயிருக்கிறது.

பாரதியார் பல்கலைக்கழகம் : கோவை

பகுதி 1 - தமிழ்

வினாத்தாள் அமைப்பு - முதற்பருவத்திற்குரியது

நேரம் : 3 மணி மதிப்பெண்கள் : 100

பிரிவு அ : ஒரு சொல் / தொடரில் விடை எழுதுக ( 10 x 1 = 10 )

ஒவ்வொரு அலகிலிருந்தும் இரண்டு வினாக்கள்

பிரிவு ஆ : இரண்டு பக்க அளவில் விடை எழுதுக ( 5 x 6 = 30 )

செய்யுள் : 3 வினாக்கள்

இலக்கணம் : 1 வினா

சிறுகதை : 1 வினா

பிரிவு இ : கட்டுரை அளவில் விடை எழுதுக ( 5 x 12 = 60 )

செய்யுள் : 2வினாக்கள்

சிறுகதை : 1 வினா

இலக்கிய வரலாறு : 1 வினா

மொழிபெயர்ப்பு : 1 வினா

குறிப்பு : ஆ,இ பிரிவுகளில் வினாக்கள் “ இது அல்லது அது” என்ற வகையில் அவ்வவற்றிற்குரிய அலகுகளிலிருந்து அமைய வேண்டும்